# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**ஆணை நாள் 09.03.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),
மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 20285/விசாரணை/E/2023**

திரு.செ.தர்மராஜீ -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி-620 001. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 27.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், திருச்சி கிழக்கு வட்ட சார் ஆய்வாளர் திரு.சித்தார்த்தன் 30.03.2026 அன்று நேரில் ஆஜராகி, திருச்சி இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர்/தலைமை எழுத்தரின் 02.03.2026 தேதியிட்ட அறிக்கை மற்றும் திருச்சி மாவட்ட வருவாய் அலுவலரின் 17.03.2026 தேதியிட்ட அறிக்கை ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. இவ்வாணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 5(1) தொடர்பாக, திருச்சி இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர்/தலைமை எழுத்தர் 02.03.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், மேல்முறையீட்டாளரை 20.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 02.02.2026 அன்று காலை 11.00 மணியளில் தங்கள் அலுவலகத்திற்கு ஆஜராகிட கோரியிருந்ததாகவும், ஆனால் மேல்முறையீட்டாளர் அன்றைய தேதியில் அஜராகவில்லை என்பதால், மேல்முறையீட்டாளருக்கு 02.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அருள்மிகு அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரிடம் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ள புகார் போன்று இனிவருங்காலங்களில் நடைபெறாவண்ணம் கண்காணிக்க கேட்டுக் கொண்டுள்ளதாகவும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் உத்தரவுப்படி, மூத்த குடிமக்கள், பாலூட்டு தாய்மார்கள், கர்ப்பிணி பெண்கள், மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் எளிதாக சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற தகவலை பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அதனை மேல்முறையீட்டாளர் சார்பாக பெறப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் சார்பாக பெறப்பட்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. இவ்வாணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 5(2) தொடர்பாக, திருச்சி மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலரின் 17.03.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், முன்னாள் திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலரின் 03.03.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார். முன்னாள் திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் 03.03.2026 தேதியிட்ட தனது எழுத்துமூலமான விளக்கத்தில், மேல்முறையீட்டாளரின் 29.10.2022 அன்று மாவட்ட ஆட்சியருக்கு அளித்த புகார் மனுவினை திருச்சி மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை உதவி இயக்குநர் அலுவலக உதவியாளர் தங்கள் அலுவலக மனுக்கள் பதிவேட்டில் கையொப்பமிட்டு எடுத்துச் சென்றுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளர் 03.07.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவுடன் அவரது 29.10.2022 நாளிட்ட புகார் மனுவின் நகலினை இணைக்காத காரணத்தினால் மேற்படி தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு எப்பிரிவிற்கு தொடர்புடையது என அறிய இயலவிலை என்றும், மேல்முறையீட்டாளரின் மனு 03.07.2023 அன்று வரப்பெற்றபோது, தான் திருச்சி மாவட்டத்தில் தனித் துணை ஆட்சியர், சமூக பாதுகாப்புத் திட்ட அலுவலராகவும், திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) ஆகவும் கூடுதல் பொறுப்பு வகித்து வந்தததாகவும், கூடுதல் பணிச்சுமையின் காரணமாக மேல்முறையீட்டாளரின் 03.07.2023 நாளிட்ட மனுவிற்கு உரிய காலக்கெடுவிற்குள் பதில் வழங்க இயலவில்லை என்றும், இனி வருங்காலங்களில் இதுபோன்று தவறுகள் நடைபெறாது என்று தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

4. இவ்வாணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 09.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 20285/விசாரணை/E/2023**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/
மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி-620 001.

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி-620 001.

திரு.செ.தர்மராஜீ
18 கூடலூர், ராக்கம்பட்டி தபால்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்-639 120.

Copy to: File

RJ/PS 9,4